# 3 எல்லோரும் கொண்டாடுவோம்

உலகின் பழைமை வாய்ந்த நாடுகளுள் நம் இலங்கையும் ஒன்று. நம் நாட்டில் பல்வேறுபட்ட மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் மொழி, இனம், சமயம், பண்பாடு, உணவு, உடை, பழக்கவழக்கங்கள் போன்றவற்றால் வேறுபடுகின்றார்கள். எனினும் அனைவரும் இலங்கையர் என்ற ஒருமைப்பாட்டு உணர்வுடன் வாழ்கின்றார்கள்.

நம் நாட்டில் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் உள்ளன. இச்சமயங்களைச் சார்ந்த மக்கள் பல பண்டிகைகளைக் கொண்டாடுகின்றார்கள். இப்பண்டிகைகள் நல்ல நோக்கங்களின் அடிப்படையில் கொண்டாடப்படுகின்றன. அவை நம்மிடையே அன்பையும், பரிவையும், நட்பையும் வளர்க்கின்றன.



விசாகத் திருநாள் (வெசாக் பண்டிகை) வைகாசி மாதத்துப் பௌர்ணமி தினத்தில் பௌத்த மக்களால் கொண்டாடப்படுகின்றது. இது புத்த பெருமானின் பிறப்பு, அவரது ஞானோதயம், பரிநிர்வாணம் ஆகிய மூன்று சம்பவங்களையும் நினைவுறுத்தும் புனிதத்திருநாளாகும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

அன்றைய தினம் வீடுகள், அலுவலகங்கள், அமைச்சுக்கள், விகாரைகள், அனைத்து இடங்களும் அலங்கரிக்கப்படும். அலங்காரப் பந்தல்களும் வண்ண விளக்குகளும் நாடெங்கும் காட்சியளிக்கும்.

பௌத்தர்கள் அன்றைய தினம் அன்னதானம் வழங்குவார்கள். அதிகமானோர் தமது வணக்கஸ்தலங்களுக்குச் சென்று அட்ட சீல நோன்பு நோற்பார்கள். நாள் முழுவதையும் தியானத்திலும் பௌத்த மத போதனைகள் கேட்பதிலும் கழிப்பார்கள்.

தீபாவளி ஐப்பசி மாதத்தில் இந்துக்களினால் கொண்டாடப் படும் ஒரு பண்டிகையாகும். மக்கள் நலனுக்காக நரகாசுரனைக் கண்ணபிரான் அழித்த நாளாக இதனை இந்துக்கள் கொண்டாடு-வார்கள். புத்தாடை அணிந்து, இனிப்பு வழங்கித் தீபம் ஏற்றி அன்றைய தினத்தை மகிழ்வோடு கொண்டாடுவார்கள்.




பொங்கல் விழா, உழவர்களின் அறுவடைத் திருநாள் ஆகும். கதிரவனுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக இது கொண்டாடப் படுகின்றது. வயலில் விளைந்த புது நெல்லைக் குற்றிப் பொங்கலிட்டு கரும்பு, மஞ்சள், பூசணி, அவரை, கிழங்கு முதலியவற்றைக் கதிரவனுக்குப் படைத்து இது கொண்டாடப்படுகின்றது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக



இயேசு பெருமான் பிறந்த நாளை ‘நத்தார் திருநாள்’ எனக் கிறிஸ்தவர்கள் கொண்டாடுகின்றார்கள். ‘‘உன்னைப் போல் உன் அயலானையும் நேசி’’ என்பது இயேசுபிரான் மனித குலத்திற்கு வழங்கிய அறிவுரையாகும். உயர்வு தாழ்வு கருதாமல் ‘‘அனைவரும் ஆண்டவனின் பிள்ளைகளே’’ என்னும் பொது நோக்கோடு இப்பண்டிகையை அவர்கள் கொண்டாடுகின்றார்கள்.



இஸ்லாம் சமயத்தவர்கள், ரமழான் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். ‘இஸ்லாம்’ என்ற சொல்லுக்கு ‘அமைதி பெறும் வழி’ என்பது பொருளாகும். ‘இறைவன் ஒருவரே: அவருக்காக முற்றிலும் தம்மை அர்ப்பணித்துக் கொள்வது மக்களின் கடமை’ என்று ‘திருக்குர்ஆன்’ கூறுகின்றது. நாள்தோறும் ஐந்து முறை அல்லாஹ்வைத் தொழும் இஸ்லாம் சமயத்தவர்கள், ‘ரமழான்’ மாதத்தில் நோன்பு இருக்கின்றார்கள். ஏழை எளியவர்களுக்கு உணவு, உடை போன்றவற்றை வழங்குகின்றார்கள். இதனால் பிறருக்கு உதவும் பண்பு வெளிப்படுகின்றது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இத்தகைய பண்டிகைகள் ஒருவருக்கொருவர் மனம் கலந்து பழக வழி செய்கின்றன. பல்வேறு இனங்களுக்கும் இடையே ஒற்றுமையை வளர்க்கும் பாலமாக இவை அமைகின்றன. தேசிய ஒற்றுமைக்கு மட்டுமன்றி மக்கள் நலனுக்கும் அடிப்படையாக அமைகின்றன.

## சொல் அறிமுகம்
## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | பண்பாடு | - | සංස්කෘතිය |
| 2. | ஒருமைப்பாடு | - | එකමුතු |
| 3. | பரிவு | - | අනුකම්පාව |
| 4.. | பௌர்ணமி தினம் | - | පෝය දිනය |
| 5. | ஞானோதயம் | - | ඥානෝදය |
| 6. | பரிநிர்வாணம் | - | පරිනිර්වාණය |
| 7. | போதனைகள் | - | බණ දේශනාව |
| 8. | அன்னதானம் | - | බත් දන්සල |
| 9 | அதிகமானோர் | - | වැඩි පිරිසක් |
| 10 | அர்ப்பணிப்பு | - | කැපවීම |
| 11. | உதவும் பண்பு | - | උදව් කිරීමේ ගුණය |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත දී ඇති ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. பௌத்த மக்களால் கொண்டாடப்படும் மதம் சார்ந்த விழாக்கள் இரண்டினைக் குறிப்பிடுங்கள்?
2. இந்துக்களால் கொண்டாடப்படும் விழாக்கள் யாவை?
3. இயேசுபிரான் மனித குலத்திற்குக் கூறும் அறிவுரை என்ன?
4. “திருக்குர் ஆன் ” கூறுவது யாது?
5. இக்கட்டுரையாசிரியர் எதனைச் சொல்ல முயற்சிக்கின்றார்?


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - I

**பொருத்தமான சொற்களை இணைப்போம்.**

**සුදුසු වචනය යා කරමු**

**(அ) சமயங்கள்** | **விழாக்கள்**

| சமயங்கள் | விழாக்கள் |
|---|---|
| இஸ்லாம் | நத்தார் |
| பௌத்தம் | ஹஜ்ஜுப் பெருநாள் |
| கிறிஸ்தவம் | தைப்பொங்கல் |
| இந்து | பொசன் பண்டிகை |

**(ஆ) சமயங்கள்** | **நூல்கள்**

| சமயங்கள் | நூல்கள் |
|---|---|
| பௌத்தம் | பைபிள் |
| இந்து | திருக்குர்ஆன் |
| கிறிஸ்தவம் | பகவத்கீதை |
| இஸ்லாம் | திரிபீடகம் |

## செயற்பாடு - II

**பின்வரும் சொற்களைக் கருத்துப்புலப்படுமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுங்கள்.**

**පහත සඳහන් වචන යොදා අර්ථවත්ව වාක්‍ය ලියමු.**

1. இனம் :-.................................................
2. சமயம் :-.................................................
3. புத்தாடை :-.................................................
4. அமைதி :-.................................................
5. ஒற்றுமை :-.................................................



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - III

**கீழ்க் காணும் அட்டவணையைப் பூரணப்படுத்துவோம்.**

**පහත දැක්වෙන වගුව සම්පූර්ණ කරමු.**

| இலங்கையில் பின்பற்றப்படும் சமயங்கள் | அச்சமயத்தினரால் கொண்டாடப்படும் விழாக்கள் | விழாக்கள் கொண்டாடப்படுவதற்கான காரணங்கள் | கொண்டாடப்படும் காலம் | கொண்டாடப்படும் முறை |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

## *செயற்பாடு - IV*

**மேற்கூறப்பட்ட பண்டிகைகளுக்கான படங்களைச் சேகரித்து வகுப்பறையில் கண்காட்சி ஒன்றை நடத்துவோம்.** ඉහත සඳහන් උත්සව සඳහා වූ පින්තූර එකතු කර පංති කාමරයේ ප්‍රදර්ශනයක් පවත්වමු

## *செயற்பாடு - V*

**கீழ்க்காணப்படும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களை பட்டியற் படுத்துவோம்.** පහත සඳහන් වාක්‍යවල තිබෙන නාම පද ලැයිස්තුගත කරමු.

- சிறுவன் வீதியில் ஓடினான்.
- அப்பா வயலில் வேலை செய்கின்றார்.
- நான் மாசி மாதம் பிறந்தேன்.
- தங்கை பூப்பறித்தாள்.
- அம்மா கை கழுவுகின்றார்.
- ஆசிரியர் மிகவும் நல்லவர்.
- எனது அம்மா கருணையுடையவர்.
- தினமும் கடவுளை வணங்குதல் வேண்டும்.
- நான் மாமாவிற்குக் கடிதம் எழுதுதல் வேண்டும்.

அட்டவணைப்படுத்திய பெயர்ச்சொற்கள் அனைத்தும் ஒரே தன்மையுடையனவா என்று அவதானியுங்கள்.

## இலக்கணம்

**சிறுவன் வீதியில் ஓடினான்.**

இவ்வாக்கியத்தில் சிறுவன் என்னும் பெயர்ச்சொல் ஒரு பொருளைக் குறித்து நிற்கின்றது. எனவே, பொருளின் பெயரைக் குறிப்பது **பொருட் பெயர்** எனப்படும்.

வீதி என்பது ஓர் இடத்தின் பெயரைக் குறிப்பதாகும். எனவே ஓர் இடத்தினுடைய பெயரைக் குறிக்கும் சொல் **இடப்பெயர்** எனப்படும்.

**நான் மாசி மாதம் பிறந்தேன்**

இவ்வாக்கியத்தில் வரும் மாசி, மாதம் என்னும் பெயர்சொற்கள் காலத்தின் பெயர்களைக் குறிப்பதால்; அவை, **காலப்பெயர்** எனப்படும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

- **தங்கை பூப்பறித்தாள்.**
- **தங்கை பூப்பறித்தல்.**
- **அம்மா கை கழுவுகின்றார்.**

இவற்றில் வரும் பூ, கை என்னும் பெயர்ச்சொற்கள் உறுப்புக்களைக் குறிக்கப் பயன்படுவதால், இவை, **சினைப்பெயர்கள்** எனப்படும்.

- **அம்மா கருணையுடையவர்.**
- **ஆசிரியர் மிகவும் நல்லவர்.**

இவ்வாக்கியங்களில் உள்ள கருணை, நல்லவர் என்னும் பெயர்ச்சொற்கள் ஒரு பொருளின் குணத்தை, தன்மையை, இயல்பைக் குறிப்பதால் இவை **குணப்பெயர்கள்** எனப்படும்.

- **கடவுளை வணங்குதல் வேண்டும்.**
- **மாமாவிற்குக் கடிதம் எழுதுதல் வேண்டும்.**

இவ்வாக்கியங்களில் உள்ள வணங்குதல், எழுதுதல் போன்றன தொழிலைக் குறிப்பதால்; அவை, **தொழிற்பெயர்கள்** எனப்படும்.

## *செயற்பாடு* - VI

**கீழே தரப்பட்டுள்ள சொற்கூட்டத்திலுள்ள சொற்களை வாசித்து தரப்பட்டுள்ள அட்டவணையைப் பொருத்தமுற நிரப்புவோம்.** පහත සඳහන් වචන සමූහයේ ඇති වචන කියවා දෙන ලද වගුව සුදුසු පරිදි සම්පූර්ණ කරමු.

| | | | |
|---|---|---|---|
| இராமன் | நடத்தல் | தைத்தல் | இனிமை |
| கண்டி | பகல் | அன்பு | புத்தகம் |
| வாழையிலை | பறவை | கார்த்திகை | இந்தியா |
| இரக்கம் | நீலம் | படித்தல் | மாத்தளை |
| ஊர் | தாமரைப்பூ | காது | பல் |

| பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | குணப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**கீழ்க்காணப்படும் சொற்களைக் கருத்துப் புலப்படுமாறு வாக்கியங்களில் வைத்து எழுதுங்கள்.**
**පහත දී ඇති වචන යොදා අර්ථවත් වාක්‍ය ලියමු.**

1. இந்தியா :- ..........................................................
2. நீலம் :- ..........................................................
3. இரக்கம் :- ..........................................................
4. சித்திரை :- ..........................................................
5. இராமன் :- ..........................................................
6. தாமரைப்பூ :- ..........................................................


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக